CULTURAL NIGHT

# மலையக மக்கள் ஒன்றியம்
# Malayaga Makkal Ondrium



## Indian YMCA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

London W1T, United Kingdom, 17 June 2007

My men!
They lie dust under dust
Beneath the tea,
No wild weed flowers
Or memories token
Tributes raise
Over their humble mould
The sons trample,
Over their fathers' biers!
O shame what man
Ever gave them a grave?
Only god in His Grace
Covered them with His grass

- C.V.Velupillai
"In Ceylon's Tea Gardens"

புழுதிப் படுக்கையில்
புதைந்த என் மக்களைப்
போற்றும் இரங்கற்
புகல் மொழி இல்லை

பழுதிலா அவர்க் கோர்
கல்லறை இல்லை
பரிந்தவர் நினைவுநாள்
பகருவார் இல்லை


ஊனையும் உடலையும்
ஊட்டி இம்மண்ணை
உயிர்த்தவர்க்கு இங்கே
உளங்கசிந் தன்பும்

பூணுவார் இல்லை - அவர்
புதை மேட்டிலோர் - கானகப்
பூவைப் பறித்துப்
போடுவார் இல்லையே.



**(தமிழில் : சக்தீ அ. பாலையா)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதல் காலடி

நூற்றாண்டுகால அந்தகாரத்தில் திளைத்திருந்த மலையகத் தமிழர்களின் சமூகவாழ்வில் அரசியல் உரிமைகளும் ஜனநாயக வியாப்தியும் புத்தெழுச்சியைத் தோற்றுவித்துள்ளன. மலையக மக்கள் தனித் தேசிய இனமாக அடையாளம் காணப்பட்டிருப்பதுடன், அரசப்பதவி நியமனங்களை அனுபவிக்கும் வாய்ப்புகளும் அவர்களுக்கு வழங்கப்படிருப்பது நிறைவுதரும் செய்திகளே.

ஆயினும், இனவாத வன்முறையின் நச்சுக்கரங்கள் மலையகத் தமிழர்களைத் தீண்டும் அச்சுறுத்தல் மலையகத்தில் தொடர்ந்தவண்ணமுள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் என்ற பெயரில் மலையகத்தில் கைதுகள் அடிக்கடி இடம்பெற்றுவருகின்றன. ஓர் இனம் கௌரவத்துடன் தலைநிமிர்ந்து வாழ இந்த அச்சுறுத்தல்கள் அகலவேண்டியது அவசர நிர்ப்பந்தமாகும். இவை பாரிய அரசியல் மாற்றங்களை வேண்டிநிற்கின்றன.

இந்நிலையில், மலையகத்திலிருந்து புலம்பெயர்ந்தோர் ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் சிறுதொகையினராக வாழ்ந்துவருகின்றனர். சர்வதேச ரீதியில் புலம்பெயர்ந்த மலையகத் தமிழர்கள் அமைப்பு வடிவம் பெறுவது நம்முன் நிற்கும் அவசிய நடவடிக்கையாகும். மலையக மக்களின் பிரச்சினைகளை சர்வதேச அரங்கில் முன்வைப்பதற்கும், மலையகத்தவர்களின் சமூக வாழ்வில் முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்கும் இத்தகைய அமைப்பு பெரும்பணியாற்றமுடியும். மலையக மக்கள் ஒன்றியம் இந்த நீண்ட பயணத்தில் தனது முதல் காலடியைப் பதிக்கிறது.

மு. நித்தியானந்தன்
தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார மாலை - 2007



**M. S.Thambirajah**

Obtained MBBS from the University of Peradeniya in 1967and served as a lecturer in the Colombo Medical Faculty from 1971 to 1974. He worked in Hatton for 10 years as General Practitioner.

He has been a Consultant Child and Adolescent Psychiatrist for the last 20 years in the UK. He is a lecturer in psychiatry at the University of Birmingham and University of Keele.

He has authored three medical books.



**ஜெயந்தி யோகராஜா**

*அடையார் கலா க்ஷேத்திராவில் நடனம் பயின்ற இவர் 'சலங்கை நர்த்தனாலயா' என்ற நடனப் பள்ளியை நிர்வகித்துவருகிறார். ஒல்லாந்திலும், ஜேர்மனியிலும், லண்டனிலும் நடனம் பயிற்றுவித்துவருகிறார்.*

## நிகழ்ச்சிகள்

(மாலை 5.00 - 10.00 மணி)

1. மங்கள விளக்கேற்றல்

2. தமிழ் வாழ்த்து

3. வரவேற்புரை:
   திரு எஸ். பாலசேகர் (பொருளாளர்)

4. புஷ்பாஞ்சலி: சலங்கை நர்த்தனாலயா

5. புல்லாங்குழல்: பிரவீன் பிரதாபன்
   - மிருதங்கம்: ரமணன் தவராஜா

6. நடனம்: ஜதிஸ்வரம் - தீக்ஷணா ராஜதாசன் (ஸ்ரீமதி நளாயினி இராஜதுரையின் மாணவி)

7. நடனம்: சானியா, அமிலியா சகோதரிகள்

8. சிறப்புரை:
   பேராசிரியர் இரா. வேங்கடாசலபதி
   (Madras Institute of Development Studies)

9. 'கீ போர்ட்' இசை:
   சானியா, அமிலியா சகோதரிகள்

10. நடனம்: நவரசம் - சலங்கை நர்த்தனாலயா

11. உரை: திரு ரி. சண்முகதாஸ
    (உப தலைவர்)

12. புதிர்: தொகுப்பாளர்
    - திரு எஸ். தினேஷ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பிரதம விருந்தினர் உரை:
டாக்டர் எஸ். தம்பிராஜா

14. நடனம்: மயிலாட்டம்
- சலங்கை நர்த்தனாலயா

15. வாத்திய இசை:
திரு ஆனந்தநடேசனின் மாணவர்கள்

16. பாட்டு

17. தலைவர் உரை: திரு மு. நித்தியானந்தன்

18. இணையத்தளம் அறிமுகம்:
திரு எஸ். தினேஷ்குமார்

19. மணிப்புரி நடனம்:
சலங்கை நர்த்தனாலயா

20. குறத்தி நடனம்: சலங்கை நர்த்தனாலயா

21. இசை நிகழ்ச்சி:
ஹவுன்ஸ்லோ தமிழ்க் கலை மன்றம்

22. மணிப்புரி நடனம்:
சலங்கை நர்த்தனாலயா

23. அதிஷ்டலாபச் சீட்டு: திரு முத்து

24. பரிசளிப்பு

25. இராப்போசனம்

26. நன்றியுரை:
திரு ரி. சுப்பிரமணியம் (செயலாளர்)

---

**நிகழ்ச்சித் தொகுப்பு: தினேஷ்குமார்**
**மேடை நிர்வாகம்: மீனாள் நித்தியானந்தன்**



**நளாயினி ராஜதுரை**
நாட்டிய மேதைகளான குரு கோபிநாத், வேல் ஆனந்தன், பத்மா சுப்பிரமணியம் ஆகியோரிடம் நடனம் பயின்ற இவர், நடன உதவிக் கல்வி பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். சிறந்த நர்த்தகியான நளாயினி திறமைமிக்க நடன நெறியாளராவார்.



**கே. ஆனந்தநடேசன்**
தெல்லிப்பளையில் இசைப் பாரம்பரியம் மிகுந்த குடும்பத்தைச் சேர்ந்த இவர் திறமை மிக்க மிருதங்க ஆசிரியராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சில வார்த்தைகள்...

மலையக மக்களின் முன்னேற்றத்திற்குத் தங்களாலான உதவியினை வழங்குமுகமாக இங்கிலாந்தில் வாழும் மலையகத் தமிழர்கள், 2005 ஏப்ரல் 10ஆம் திகதி குறோளியில் கூடி, ஆலோசித்துக் கண்ட முடிவில் மலர்ந்ததுதான் மலையக மக்கள் ஒன்றியம். ஈராண்டுகால வளர்ச்சியைக் கண்டிருக்கும் மலையக மக்கள் ஒன்றியத்தின் 2005ஆம் ஆண்டிற்கான கலாசார மாலை நிகழ்ச்சி 2005 நவம்பர் 19ஆம் திகதி வெம்பிளி ஷட்பறி பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றபோது, இங்கிலாந்தில் வாழும் மலையகத் தமிழர்கள் பெருந்தொகையானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்தனர்.

மலையக மக்கள் ஒன்றியம் தனது முதல் நடவடிக்கையாக, மலையகத்தில் கணனித் தொழில்நுட்ப அறிவினை வழங்குமுகமாக நான்கு கணனிப் பயிற்சி நிலையங்களை அமைத்துள்ளது.

2006 மார்ச் மாதத்தில் நாவலப்பிட்டியில் வெஸ்தால் தோட்டம், கடியன், லெனா தொளஸ்பாகை ஆகிய மூன்று இடங்களிலும், அப்புத்தளையில் பியூவைத் தோட்டத்திலுமாக (Beavais estate) இந்தக் கணனிப் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ளன. 2007ஆம் ஆண்டின் கலாசார மாலை நிகழ்வில் மருத்துவ நிபுணரான டாக்டர் எஸ். தம்பிராஜா அவர்களும் அவரது பாரியாரும் பிரதம அதிதிகளாகக் கலந்து சிறப்பிக்க உள்ளனர். இந்நிகழ்வில் மலையக மக்கள் ஒன்றியத்துக்கான இணையத்தளத்தை திரு எஸ். தினேஷ்குமார் அறிமுகம் செய்து வைத்து, ஒன்றியத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமிடுகிறார். மலையக மக்கள் ஒன்றியம் தங்களின் எல்லைக்குட்பட்ட வகையில் தனது பணிகளை விஸ்தரித்துச் செயற்படும் என்று கூறுவதில் பெருமையடைகிறோம்.

பி.சண்முகதாச
உப தலைவர்
மலையக மக்கள் ஒன்றியம்
**29.5.2007**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கலாசாரமாலை - 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# மலையகத்தில் கணனிப் பயிற்சி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சென்று வருகிறேன் ஜென்ம பூமியே!

நக்கிள்ஸின் தொடர்களை நான்
நாளெல்லாம் பார்க்கிறேன்.
'நீ பார்த்துச் சலிக்காத
பொருளென்ன' என்று நீர்
எனைக் கேட்டால்
நான் சொல்லும் பதிலிதுதான் -
'குளிர்மேகம் வாடியிடும்
நக்கிள்ஸின் தொடர்கள்தான்
நான் பார்த்துச் சலிக்காத
நல்ல பொருள்' என்பேன் நான்!

நாட்கள் கழிகின்றன
நாடுகடக்கும் வேளை
நெருங்குகின்றது
பிரிவு என் வாசலைத் தட்டுகிறது.
பிரிவு வேதனையின் பிரதிநிதி
விழி வாசலை முட்டுகிறான்.
அழுது விடுவேனோ என்ற பயம்
என்னை அமுக்குகிறது...

நான் பிறந்த நாட்டினிலே
நான் இருக்க விதியில்லை
என் ஜென்ம பூமியிலே
எனக்கு உரிமையில்லை
என்றக்கால் -
வேதனைகள் முட்டாதோ!
சொல்லுங்கள் தோழர்களே

ஓ!
என்னருமைத் தோழர்களே!
இறுதியாக
கப்பலிலே நான் நின்று
கையசைத்து விடை சொல்லும்
போதினிலே -
என் கண்கள் மாத்திரமா?
உங்களது கண்களும்தான்
உணர்ச்சிமிக்க ஒரு பாஷையினை
வெளிப்படுத்தும் நானறிவேன்!
ஏனெனில்
என் கவிதைப் பொருள்களை நான்
இன்று பிரிகின்றேன்
இதயத்தின் சுமையோடு
தேசம் கடக்கின்றேன்.

சென்று வருகின்றேன்
மலைத்தொடர்களே!
திரும்பவும் நான் உன்னை
என்று காண்பேனோ?
சென்று வருகிறேன்
தோழர்களே!
திரும்பவும் நாம் ஒன்றாய்
என்று மலையேறுவோமோ?
சென்று வருகின்றேன்
கொற்ற கங்கையே!
திரும்பவும் உன் மேனியில்
என்று நீராடுவேனோ?
சென்று வருகின்றேன்
வெகுஜனங்காள்
திரும்பவும் நான் இதயமகிழ்வோடு
என்று கரம்குலுக்குவோமோ?
சென்று வருகின்றேன்
ஜென்ம பூமியே!
திரும்பவும் உன் வெளிகளில்
என்று ஓடிமகிழ்வேனோ?

- வண்ணச்சிறகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUN INTERNET CAFE

surf/e-mail
Phones and accessories
DVD burning
Fax/Photo copying

**273 Mark House Road**
**WALTHAMSTOW E17 8EE**
**TP 020 7993 4442**



*With Best Compliments*

# SPENCERS NEWS
# &
# FOOD

**308 STAFFORD ROAD, CROYDON, CR0 4NH**
**TP 020 8688 8310**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Compliments from

COSTCUTTER
&
IMAYAM'S

101 LANSBURY DRIVE
HAYES, MIDDLESEX, UB4 8RW
TP 020 8813 6815

Indra Sebastian Solicitors
Administrators of Oaths

- Home Officeஇல் ஒரே நாளில் ஏளைய பெற்றுத்தரும் சேவை
- வேலை அனுமதிப்பத்திரம் பெற்றுத்தரல்
- வர்த்தக விசாக்கள் பெற்றுத்தரல்
- ஐரோப்பிய நாடுகளுக்கான விண்ணப்பங்கள்
- அகதி/குடியுரிமை விண்ணப்பங்கள்
- வீடு, வியாபார ஸ்தாபனம் வாங்குதல்/விற்பனை செய்தல்
- வியாபாரப் பிணக்குகள்

Tel: 020 8427 3303
Fax: 020 8427 3313

Website: issolicitors.co.uk
email: info@issoliciotrs.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org